T

பதிவெண் | | | | | | |

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2021

## வகுப்பு 12

## வரலாறு

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **20×1=20**

1) இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
அ) 1825 ஆ) 1835 இ) 1845 ஈ) 1855

2) இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர்
அ) சுபாஷ் சந்திரபோஸ் ஆ) காந்தியடிகள்
இ) A.O. ஹியூம் ஈ) பாலகங்காதர திலகர்

3) "இந்தியாவின் முதுபெரும் மனிதர்" என அழைக்கப்பட்டவர்
அ) பாலகங்காதர திலகர் ஆ) M.K. காந்தி
இ) தாதாபாய் நெளரோஜி ஈ) சுபாஷ் சந்திரபோஸ்

4) பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?
அ) பங்கிம் சந்திர சட்டர்ஜி - ஆனந்தமடம்
ஆ) G. சுப்ரமணியம் - விடிவெள்ளிக்கழகம்
இ) மிண்டோ பிரபு - பல்கலைக்கழகச் சட்டம் 1904
ஈ) தீவிர தேசியவாத மையம் - சென்னை

5) கல்கத்தாவில் அனுசீலன் சமிதியை நிறுவியவர்
அ) புலின் பிஹாரி தாஸ்
ஆ) ஹேமச்சந்திர கானுங்கோ
இ) ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார் போஷ்
ஈ) குதிரம் போஷ் மற்றும் பிரஃபுல்லா சாக்கி

6) பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது?
அ) மகாத்மா காந்தியடிகள் ஆ) மதன் மோகன் மாளவியா
இ) திலகர் ஈ) பி.பி.வாடியா

7) "Indian Unrest" என்ற புத்தகத்தின் ஆசிரியர்?
அ) லாலா லஜபதி ராய் ஆ) வேலண்டைன் சிரோல்
இ) திலகர் ஈ) அன்னிபெசன்ட்

8) பின்வருவனவற்றைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் உதவியுடன் பொருத்துக.
அ) கதர் கட்சி - I) 1916
ஆ) நியூ இந்தியா - II) 1913
இ) தன்னாட்சி இயக்கம் - III) 1909
ஈ) மிண்டோ மார்லி சீர்திருத்தம் - IV) 1915
அ) II, IV, I, III ஆ) IV, I, II, III இ) I, IV, III, II ஈ) II, III, IV, I

9) தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது?
அ) திலகர் ஆ) அன்னிபெசன்ட் இ) பிபி வாடியா ஈ) எச்.எல்.ஆல்காட்

10) காந்தியடிகளின் அரசியல் குரு யார்?
அ) திலகர் ஆ) கோகுலே இ) W.C. பானர்ஜி ஈ) M.G. ரானடே

11) பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

அ) நாமசூத்ரா இயக்கம் - 1. வடமேற்கு இந்தியா
ஆ) ஆதிதர்மா இயக்கம் - 2. தென்னிந்தியா
இ) சத்ய சோதக் இயக்கம் - 3. கிழக்கிந்தியா
ஈ) திராவிட இயக்கம் - 4. மேற்கு இந்தியா

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 4 | 2 |
| ஆ) | 2 | 1 | 4 | 3 |
| இ) | 1 | 2 | 3 | 4 |
| ஈ) | 3 | 4 | 1 | 2 |

12) காந்தியடிகள் தண்டி யாத்திரை பயணம் சென்றடைந்த ஆண்டு?
அ) ஏப்ரல் 6, 1930 ஆ) மார்ச் 6, 1930
இ) ஏப்ரல் 4, 1930 ஈ) மார்ச் 4, 1930

13) இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது?
அ) டிசம்பர் 31, 1929 ஆ) மார்ச் 12, 1930
இ) ஜனவரி 26, 1930 ஈ) ஜனவரி 26, 1931

14) கூற்று : ஜின்னாவை "இந்து-முஸ்லீம் ஒற்றுமையின் தூதர்" என்று சரோஜினி அம்மையார் அழைத்தார்.
காரணம் : லக்னோ ஒப்பந்தத்தின் தலைமைச் சிற்பி ஜின்னா ஆவார்.
அ) கூற்று சரி காரணம் கூற்றிற்கான விளக்கம்.
ஆ) கூற்று தவறு காரணம் சரி
இ) கூற்று சரி காரணம் கூற்றிற்கான விளக்கமல்ல.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

15) முதலாவது பயணிகள் இரயில் 1853 இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?
அ) மதராஸ் - அரக்கோணம்
ஆ) பம்பாய் - பூனா
இ) பம்பாய் - தானே
ஈ) கல்கத்தா - ஹீக்ளி

16) பின்வருவனவர்களில் கான்பூர் சதிவழக்கில் கைது செய்யப்பட்டவர் யார்?
அ) எம்.என்.ராய் ஆ) பகத்சிங்
இ) எஸ்.ஏ.டாங்கே ஈ) ராம்பிரசாத் பிஸ்மில்

17) கீழ்காண்பவர்களில் 64 நாட்கள் உண்ணாவிரதத்திற்குப் பிறகு சிறையில் உயிரிழந்தவர் யார்?
அ) புலின்தாஸ் ஆ) சச்சின் சன்யால் இ) ஜதீந்திரநாத்தாஸ் ஈ) பிரித்தி வதேதார்

18) காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்த நாளினை முஸ்லிம் லீக் மீட்பு நாளாக கொண்டாடியது.
அ) 22 டிசம்பர் 1940 ஆ) 5 பிப்ரவரி 1939
இ) 23 மார்ச் 1937 ஈ) 22 டிசம்பர் 1939

19) மகாத்மா காந்தியடிகள் ''செய் அல்லது செத்து மடி'' என எந்த நிகழ்வின் போது அழைப்பு விடுத்தார்?
அ) சட்ட மறுப்பு இயக்கம் ஆ) ஒத்துழையாமை இயக்கம்
இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஈ) இவை அனைத்தும்

20) 1945-ல் சிம்லா மாநாட்டை கூட்டிய அரச பிரதிநிதி
அ) வேவல் பிரபு ஆ) லின்லித்கோ பிரபு
இ) மௌண்ட்பேட்டன் பிரபு ஈ) கிளமெண்ட் அட்லி

## பகுதி - II

**7×2=14**

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமான விடையளிக்கவும்:

21) அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக.
22) இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதி.
23) மிதவாத தேசியவாதிகளின் ''இறைஞ்சுதல் கொள்கை'' என்றால் என்ன?
24) அன்னிபெசன்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திர பத்திரிக்கையின் பெயர்களை கூறுக.
25) இந்திய பணியாளர் சங்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது?
26) பகிஷ்கிரித்ஹிதகர்னி சபா குறித்து எழுதுக.
27) இரண்டாவது லாகூர் சதி என்று அறியப்படும் நிகழ்வு யாது?
28) 1923 இல் வாரணாசியில் நடைபெற்ற ஆறாவது இந்து மகாசபை மாநாட்டைப் பற்றி குறிப்பு எழுதுக.
29) ஆகஸ்ட் கொடையின் சிறப்பை கூறுக.
30) சிம்லா மாநாட்டின் பேச்சுவார்த்தைகள் ஏன் முறிந்தன?

## பகுதி - III

**7×3=21**

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்:

31) மெக்காலேயின் ''இந்தியக் கல்வி'' குறித்த குறிப்புகளை ஆய்க.
32) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிகைகளின் பங்கினை எழுதுக.
33) காங்கிரஸ் இரண்டாக பிளவுபட காரணமான சூரத் மாநாட்டின் செயல்முறைகள் குறித்து எழுதுக.
34) அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.
35) சென்னை தொழிற்சங்கத்தின் தாக்கம் மற்றும் முக்கியத்துவம் என்ன?
36) ஜாலியன்வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.
37) பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?
38) சிட்டகாங் ஆயுதப்படை தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார்?
39) 1909 ஆம் ஆண்டின் மின்டோ-மார்லி சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை கூறுக.
40) சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் அவர்களின் முன்மொழிவுகளை விவாதிக்கவும்.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: **7×5=35**

41) அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூக-பொருளாதாரக் காரணிகளை ஆய்க. **(அல்லது)**

ஆ) இந்தியாவில் தேசிய விழிப்புணர்விற்கு பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறிக் கொள்கைகள் எந்த அளவிற்குக் காரணமாக இருந்தன?

42) அ) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

43) அ) திலகர் மற்றும் அன்னிபெசன்ட் அம்மையாரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரி.

44) அ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.

**(அல்லது)**

ஆ) பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரை தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது?

45) அ) ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?

**(அல்லது)**

ஆ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.

46) அ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினை பற்றி எழுதுக.

**(அல்லது)**

ஆ) இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக.

47) அ) இந்திய வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களை குறிக்கவும்:

1. சௌரி சௌரா 2. ஜாலியன் வாலாபாக் 3. தண்டி
4. நவகாளி 5. வேதாரண்யம்

**(அல்லது)**

ஆ) 1900-1950 வரை இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது நடைப்பெற்ற ஐந்து நிகழ்வுகளை காலக்கோடு வரைக.

----------